# யூன்– 05 – செவ்வாய்

## புனித பொனிபஸ்

## “சீசருக்கு உரியவற்றை சீசருக்கும் கடவுளுக்கு உரியவற்றை கடவுளுக்கும் கொடுங்கள்” (மாற்கு 12:17)

**முதல் வாசகம் : 2 பேதுரு 3 : 12 – 15, 17 – 18**

அன்பார்ந்தவர்களே! கடவுளின் நாளை எதிர்பார்த்து அவர் வருகையை விரைவுபடுத்த வேண்டும். அந்நாளில் வானங்கள் எரிந்தழிந்து பஞ்சபூதங்கள் வெந்துருகிப் போகும்.அவர் வாக்களித்த படியே நீதி குடிகொண்டிருக்கும் புதிய விண்ணுலகும் புதிய மண்ணுலகும் வரும் என நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.ஆகவே, அன்பார்ந்தவர்களே, இவற்றை எதிர்பார்த்திருக்கும் உங்களை அவர் மாசுமறுவற்றவர்களாய், நல்லுறவு கொண்டவர்களாய்க் காணும் வகையில் முழுமுயற்சி செய்யுங்கள். நம் ஆண்டவரின் பொறுமையை மீட்பு எனக்கருதுங்கள். நம் அன்பார்ந்த சகோதரர் பவுலும் தமக்கு அருளப்பட்ட ஞானத்தின்படி இவ்வாறுதான் உங்களுக்கு எழுதியுள்ளார்.அன்பார்ந்தவர்களே, நீங்கள் இவற்றையெல்லாம் ஏற்கெனவே அறிந்திருக்கிறீர்கள். கட்டுப்பாடற்றவர்களின் தவறான வழிகளால் கவர்ந்திழுக்கப்பட்டு, உங்கள் உறுதி நிலையினின்று விழுந்துவிடாதபடி கவனமா யிருங்கள்.நம் ஆண்டவரும் மீட்பருமான இயேசு கிறிஸ்துவின் அருளிலும் அறிவிலும் வளர்ச்சி அடையுங்கள். அவருக்கே இன்றும் என்றென்றும் மாட்சி உரித்தாகுக! ஆமென்

**பதில்பாடல் :** என் தலைவரே தலைமுறை தோறும் நீரே என் புகலிடம்.

**நற்செய்தி : மாற்கு 12 : 13 - 17**

அக்காலத்தில் பரிசேயர் இயேசுவை அவருடைய பேச்சில் சிக்கவைக்க ஏரோதியர் சிலரை அவரிடம் அனுப்பி வைத்தனர். அவர்கள் அவரிடம் வந்து, ”போதகரே, நீர் உண்மையுள்ளவர் ஆள் பார்த்துச் செயல்படாதவர் எவரையும் பொருட்படுத்தாமல் கடவுளின் நெறியை உண்மைக்கு ஏற்பக் கற்பிப்பவர் என்பது எங்களுக்குத் தெரியும். சீசருக்கு வரிசெலுத்துவது முறையா, இல்லையா? நாங்கள் செலுத்தவா, வேண்டாமா?” என்று கேட்டார்கள்.அவர் அவர்களுடைய வெளிவேடத்தைப் புரிந்து கொண்டு, ”ஏன் என்னைச் சோதிக்கிறீர்கள்? என்னிடம் ஒரு தெனாரியம் கொண்டு வாருங்கள். நான் பார்க்க வேண்டும்” என்றார். அவர்கள் அதைக் கொண்டு வந்தார்கள். இயேசு அவர்களிடம், ”இதில் பொறிக்கப்பட்டுள்ள உருவமும் எழுத்தும் யாருடையவை?” என்று கேட்டார். அவர்கள் அவரிடம், ”சீசருடையவை” என்றார்கள். அதற்கு இயேசு அவர்களை நோக்கி, ”சீசருக்கு உரியவற்றைச் சீசருக்கும் கடவுளுக்கு உரியவற்றைக் கடவுளுக்கும் கொடுங்கள்” என்றார். அவர்கள் அவரைக் குறித்து வியப்படைந்தார்கள்.

**தியானம்:** இன்றைய நாளுக்கான வாசகங்கள் இரண்டும் எம்மைப் படைத்த இறைவனது அன்பிலே நாம் நிலைத்திருக்க வேண்டுமாயின் எமது பொய்யான வாழ்க்கையையும், போலியான வார்த்தைகளையும் நாம் களைந்து உண்மையான, நேர்மையான வழியில் வாழ எமக்கு அழைப்புவிடுக்கின்றன. இயேசுவின் காலத்தில் யூதமக்கள் தங்கள் வருமானத்தில் மூன்றில் ஒரு பகுதியை வரியாக செலுத்த வேண்டியதாயிருந்தது. இந்தப் பின்னணியில் சீசருக்கு வரி செலுத்துவது முறையா? இல்லையா? என்றகேள்வியை இயேசுவிடத்தில் பரிசேயர் கேட்டனர். இயேசுவை சோதிப்பது மட்டுமல்ல அவரை அவரின் வார்த்தையில் எவ்வாறு சிக்கவைக்கலாம் என்பதே அவர்களின் நோக்கமாக இருந்தது. உள்ளொன்று வைத்து புறமொன்று பேசும் வெளிவேட வாழ்க்கையை இனங்கண்டு கொண்ட கிறிஸ்து அவர்களையே வியக்கவைத்தார். நமது வாழ்விலும் “வாழ்வின் மகிழ்ச்சி கொடுத்தலில் நிறைவுபெறுகிறது.” என்பதற்கு அமைவாக நாம் நேர்மையாக உழைக்கும் செல்வத்தால் நாம் வாழும் நாட்டிற்கு வரி செலுத்தும் நமது பொறுப்பை உணர்ந்து செயல்படுவதோடு பிறரின் தேவைகளையும் நிறைவு செய்வோம். எமது பொய்யான வாழ்க்கை முறைகளையும், போலியானவார்த்தைகளையும் களைந்து உண்மையான வாழ்வுவாழ இறையருளை வேண்டுவோம்.